வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 19 of 2023

வழக்கு சாட்சி – PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சாதிக் பாட்ஷா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | முகமது பாட்ஷா | தொழில் | : | டெய்லர் |
| கிராமம் | : | கரைப்புதூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24.08.2023.

(1, 2 எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள்).

முதல் விசாரணை: நாள்: 24.08.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு டெய்லராக வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 30.06.2022 ம் தேதி இரவு 9.30 மணியளவில் வருண் மளிகை கடை அருகில் நகை திருடுபோனது சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், என்னுடன் ஒருவர் கையொப்பம் செய்தோம். அவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் 4 போலீசார் இருந்தார்கள். போலீசாரின் பதவிகள் எனக்கு தெரியாது. அவர்களில் யார் வரைபடம் வரைந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் Laptop வைத்திருந்தார்கள். எங்கு வைத்து பிரிண்ட் எடுத்தார்கள் என்றால் சரஸ்வதி மளிகை கடையில் பிரிண்ட் அவுட் எடுத்தார்கள். அந்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தார்கள் என்றால் நகை திருடுபோனது சம்மந்தமாக எழுதியிருந்தார்கள். சரஸ்வதியை எனக்கு இரண்டு வருடமாக தெரியும். சம்பவ இடப்பகுதியில் நான் குடியிக்கிறேன் என்றால்

சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சரஸ்வதியை எனக்கு தெரியும் என்பதால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.08.24 20:07:41 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.